திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது குடிநீர் வசதித் திட்டம் என்று மட்டும் சொன்னார்கள். 1978ஆம் ஆண்டு பல்வேறு பஞ்சாயத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வாட்டர் போர்டு என்று அமைக்கப்பட்டும், கார்ப்பரேஷன் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது, யார் கொடுப்பது, யார் பெரியவர் என்ற போட்டா போட்டி நிலைமை இருக்கிறது. இதனால் மிகுந்த தண்ணீர்க் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்கும் தெரியும். எம். எம். டி. ஏ.விலும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, எல்லா அமைப்புகளும் ஒன்று சேர்ந்து, 1978ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட பஞ்சாயத்துப் பகுதிகளுக்கும், சென்னை நகரத்திலே தண்ணீர் கிடைக்காத பகுதிகளுக்கும், இப்பொழுது இருக்கின்ற அவல நிலையைப் போக்குவதற்கு எதிர்காலத்திலாவது ஒன்று சேர்க்க வேண்டுமென்பதை அரசு கருத்தில் எடுத்துக் கொள்ளுமா என்பதையும், எடுத்துக் கொண்டு எப்படி நடக்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, எம். எம். டி. ஏ. மூலம் அல்ல மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல M. M. W. S. S. B. மூலம் நீர் வழங்குவது கவனிக்கப்படுகிறது. இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் புதிய கருத்தைச் சொல்லுகிறார்கள். இந்தக் கருத்தை எழுப்ப வேண்டிய நேரத்தில் எழுப்ப வேண்டிய முறையில் எழுப்பினால் பரிசீலிக்கலாம். வேண்டுமானால் மாநகராட்சித் தேர்தல் முடிந்த பிறகு இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யலாம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிலில் நவீன இயந்திரங்களைப் புகுத்தும் திட்டம்.

*வினா எண். 659—திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்திலும் மற்றும் சில இடங்களிலும் தோல் பதனிடும் தொழிலில் நவீன இயந்திரங்கள் புகுத்தப்பட்டால் பல சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது ?

(இ) அரசு இதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) நவீன இயந்திரங்கள் புகுத்தப்பட்டதால் வட ஆற்காடு மாவட்டத்திலோ மற்ற இடங்களிலோ வேலை இழப்பு ஏற்பட்டதாக தகவல் ஏதும் பெறப்படவில்லை. ஆனால் வேறு சில இடங்களில் புதிய இயந்திரம் நிறுவியுள்ளதால் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் நாள்முதல் திண்டுக்கல்லில் உள்ள ஸ்ரீ தனலட்சுமி அன் கோ., நிறுவனம் நான்கு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக 1980 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் நாள் அன்று விபரம் கிடைத்துள்ளது.

(ஆ) நான்கு தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(இ) தொழில் தகராறு சட்டத்தின்கீழ் ஆட்குறைப்பு ஈட்டுத் தொகையைத்தந்த பின் ஊழியர்களை நீக்கும் உரிமை நிர்வாகத்திற்கு உள்ளது. ஊழியர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு முன் தொழிலாளர் துறை ஆணையரிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்ற பிரிவு 25 (என்) ஷரத்து சென்னை உயர்நீதி மன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழிலில் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் பணியாற்றுகிறார்கள். இந்தத் தொழிலிலே நூற்றுக்கு எண்பது பங்கு அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தோல் உற்பத்தி தமிழ்நாட்டில் இருக்கிறது. இயந்திரங்கள் அதிகமாகப் புகுத்தப்பட்டதால் 75 சதவிகிதத்தினர் பத்தாண்டுகளிலே இந்தத் தொழிலிலே வேலையை விட்டு வெளியே போய் இருக்கிறார்கள் அதைவிடப்பெரிய சங்கடம் இப்பொழுது என்னவென்றால், மத்திய அரசு முழுவதும் பதனிடும் தோலைத் தான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டிருப்பதால் இயந்திரமயமாகியும் பயனற்ற வகையில் ஏற்றுமதி இல்லை என்ற நிலையில் தொழில் சிக்கல் இருக்கிறது. தொழில் தகராறு சட்டம் என்று இதைப் பார்க்காமல் மத்திய அரசின் ஏற்றுமதிக் கொள்கை சம்பந்தப்பட்ட பிரச்னையாக இது இருப்பதால் இந்த ஏற்றுமதிக் கொள்கை மாற்றப்பட வேண்டும்; மூன்று நான்கு ஆண்டுகளுக்காவது இந்தப் பாதி பதினிட்ட தோலை ஏற்றுமதி செய்வதற்கு மாநில அரசுக்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசோடு மாநில அரசு வாதாடி இந்த உரிமையைப் பெறுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே தொழில்துறை அமைச்சருக்குப் போடவேண்டியகேள்வி, எனக்கு அல்ல.